மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 295/2010 | சாட்சி | பி.வா.சா.1 |
| பெயர் | வேலுசாமி | நாள் | 12.08.2024 |
| தகப்பனார் பெயர் | ஆறுமுகம் | | |

**வாதி தரப்பில் பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

1) வாதி எத்தனை சொத்துக்களுக்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால், மூன்று இடங்களில் உள்ள சொத்துக்களுக்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி மூன்று சொத்துக்களுக்கும் என்னென்ன பட்டா எண் மற்றும் சர்வே எண் குறிப்பிட்டுள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், அவை எனக்கு சரியாக நினைவில்லை. வாதி எவ்வளவு பாகம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. ஆனால், மொத்தம் மூன்று பேருக்குத்தான் சொத்தில் பாகம் உள்ளது.

2) தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால், என் பாட்டனார் மாரப்பனுக்கு பாத்தியப்பட்டது. என் பாட்டனார் மாரப்பனுக்கு மேற்படி சொத்து எவ்வகையில் பாத்தியப்பட்டது என்றால், என் பாட்டனார் கிரயம் பெற்றதாக கேள்விப்பட்டுள்ளேன். மேற்படி சொத்து குறித்து, என் பாட்டனார் பெயரில் உள்ள உரிமை ஆவணம் எதையேனும் நான் பார்த்துள்ளேனா என்றால், இல்லை. அவர் இறந்ததற்கு பின்னிட்டுதான் மேற்படி சங்கதி குறித்து எனக்கு தெரியவந்தது. மேற்படி சொத்து என் பாட்டனாருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டதா அல்லது அவரது சுய சம்பாத்திய சொத்தா என உறுதியாக எனக்கு தெரியாது என்றால், சரிதான்.

3) என் பாட்டனார் மாரப்பனது வாரிசு சான்றிதழ் எதையேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், செய்துள்ளேன். என் பாட்டனார் இறக்கும் சமயத்தில் யார் யாரெல்லாம் அவரது வாரிசுகள் என்றால், சித்துராஜ் மற்றும் ஆறுமுகம் ஆகியோர் அவரது வாரிசுகள் ஆவார்கள். என் தகப்பனார் ஆறுமுகம் எப்போது இறந்தார் என்றால், 1984 ம் வருடத்தில் இறந்தார். என் பாட்டனார் மாரப்பன் எப்போது இறந்தார் என்றால்,

1994ம் வருடத்தில் இறந்தார். என் பாட்டனார் இறக்கும் தருவாயில் அவரை யார் பராமரித்து வந்தது என்றால், என் சித்தப்பா சித்துராஜ் பராமரித்து வந்தார். என் பாட்டனார் இறந்த சமயத்தில் எனக்கு என்ன வயது இருக்கும் என்றால், சுமார் 25 வயது இருக்கும். வாதிக்கு என்ன வயது இருக்கும் என்றால் சுமார் 20 வயது இருக்கும்.

4) என் பாட்டனார் இறந்த சமயத்தில் வாதிக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால், இல்லை. அப்போது வாதி எங்களுடன் எங்கள் வீட்டில்தான் இருந்தார் என்றால், சரிதான். என் தந்தை இறந்த சமயத்தில் எனக்கு என்ன வயதிருக்கும் என்றால், சுமார் 17 வயது இருக்கும். மேற்படி என் பாட்டனாரது சொத்துக்கள் குறித்து அவரது வாரிசுகளிடையே ஏதேனும் பாகபிரிவினை ஏற்பட்டுள்ளதா? என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால், பாகபிரிவினை எதுவும் ஏற்படவில்லை. வாதிக்கு எப்போது திருமணம் ஆனது என்றால், 1996ம் வருடத்தில் திருமணம் ஆனது.

5) வாதியின் கணவர் ஆரம்பத்திலிருந்து டீ–கடை வைத்து தொழில் செய்து வருகிறார் என்றால், சரிதான். வாதிக்கு திருமணம் ஆன சமயத்தில் எவ்வளவு வயது இருக்கும் என்றால், சுமார் 21 வயதிற்கு மேல் இருக்கும். என் தந்தை மின்வாரியத்தில் பணிபுரிந்து விபத்தில் இறந்துவிட்டார் என்றாலும், அதற்கு இறப்பு பணபலன்கள் வழங்கப்பட்டது என்றாலும், சரிதான். என் தந்தை இறந்தற்கு நீதிமன்றத்தில் இழப்பீடு கோரி வழக்கு தாக்கல் செய்தோம் என்றால், சரிதான். மேற்படி இழப்பீட்டு வழக்கில் என் தந்தையின் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளோமா என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை.

6) என் தந்தையின் வாரிசு சான்றிதழில் யார் யாரெல்லாம் வாரிசுகளாக உள்ளனர் என்றால், என் தந்தையின் மூன்று ஆண் வாரிசுகளும், ஒரு பெண் வாரிசும், என் தாயாரும் வாரிசுகளாக உள்ளனர். மேற்படி இழப்பீட்டு வழக்கில் எத்தனை நபர்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டது என்றால், எனக்கு வழங்கப்பட்டது மட்டும் எனக்கு தெரியும். மற்றவர்கள் குறித்து எனக்கு தெரியாது. இவ்வழக்கில் என் தந்தையின் வாரிசு சான்றிதழை நான் தாக்கல் செய்துள்ளோமா என்றால், தாக்கல் செய்துள்ளோம்.

7) என் தந்தை இறந்ததற்கு நீதிமன்றத்தில் இழப்பீடு வழங்கப்பட்ட சமயத்தில் வாதிக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால், இல்லை. என் தந்தை பணியில் உள்ள சமயத்தில் இறந்ததால், அவரது பணி யாருக்கு வழங்கப்பட்டது என்றால், என் சகோதரர் மோகன்ராஜீக்கு வழங்கப்பட்டது.

(வாதி தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.